தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 58/மா/2026

நாள் 07.10.2026

கோ. இராமானுஜம்,
கடலூர்–607 002. --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையாளர்,
கடலூர் மாநகராட்சி
(2) உரிமையாளர்,
SLS Steel and Furniture
Manufacture, கடலூர்–607 002. --- எதிர்மனுதாரர்கள்

கடலூர்–607 002, திருப்பாதிரிபுலியூர், அக்கிள் நாயுடு தெரு, கதவு எண் 15/10 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. இராமானுஜம் என்பவரின் 16.02.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.02.2026 அன்று பெறப்பட்டு 58/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

ஆணை

கடலூர்–607 002, திருப்பாதிரிபுலியூர், அக்கிள் நாயுடு தெரு, கதவு எண் 15/10 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. இராமானுஜம் என்பவர் தனது 16.02.2026 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"எனது வீட்டிற்கு பக்கத்தில் சட்ட விதிகளுக்கு புறம்பாக SLS Steel and Furniture என்கிற பட்டறை இயங்குவது தொடர்பாக கடலூர் மாநகராட்சியில் மனு செய்தேன். எனது கோரிக்கை மனு மீது முறையாக செயல்படாமல் ஒருதலைபட்சமாக பட்டறை உரிமையாளர் திரு. R.தியாகராஜனுக்கு உதவும் பட்சத்தில் எனக்கு பாதகமாக செயல்பட்ட கடலூர் மாநகராட்சி சுகாதார பிரிவு திரு. செபஸ்டியன் சுகாதார அலுவலர் மற்றும் நகர்நல அலுவலர் பொறுப்பு மற்றும் திருமதி சித்ரா உதவியாளர் (H2) அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாகத் துறை MGR நகர், சென்னை அவர்களுக்கு தனித்தனி புகார் மனுக்கள் முறையே 04.08.2025, 25.08.2025 மற்றும் 15.10.2025 தேதியிட்ட மனுக்கள் பதிவுத் தபால்கள் மூலம் அனுப்பி வைத்தேன். நினைவூட்டு கடிதம் அனுப்பியும் இந்த புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் இதுநாள் வரை அறியப்படவில்லை.

எனவே, எனது 01.12.2025 தேதியிட்ட விண்ணப்பம் மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)ன்கீழ் விபரங்கள் வழங்கும்படி பொது தகவல் வழங்கும் அலுவலக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களை கோரினேன். பொது தகவல் அலுவலர் (இணை இயக்குநர் / மாநகராட்சி) சென்னை அவர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற தகவல்கள் திருப்திகரமாகவும், முழுமையானதாகவும் இல்லை என்பதால் மேல்முறையீட்டு அலுவலர் / இணை இயக்குநர் (நிர்வாகம்) தகவல் வழங்கும் உரிமைச் சட்டம், 2005 நகராட்சி நிர்வாக இயக்குநகரம் சென்னை என்கிற முகவரிக்கு மேல்முறையீட்டு விண்ணப்பம் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன்கீழ் விண்ணப்பித்தேன். மேற்படி கடிதம் 07.01.2025ல் தேதியில் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் துறையின் ஒப்புதல் அட்டை வரப்பெற்றுள்ளது. பதில் ஏதும் வரப் பெறவில்லை. எனது புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரங்கள் ஏதும் எனக்கு இதுநாள் வரை தெரியப்படுத்தப்படவில்லை என்பதால் விரைவில் தக்க தீர்வு கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவருக்கு எனது குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்துள்ளேன். எனவே அருள்கூர்ந்து எனது குற்றச்சாட்டின் பேரில் விசாரித்து தக்க உத்தரவுகள் வழங்கும்படி பிரார்த்திக்கிறேன்.''

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு 20.03.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் கடலூர் மாநகராட்சி ஆணையாளரைக் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 28.08.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. விசாரணைக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்ட பின்னர், கடலூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 13.08.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 5807/2025/எச்2–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

''திரு. கோ. இராமானுஜம் என்பவர் தாம் தகவல் உரிமை பெறும் சட்டத்தின்படி தனது வீட்டிற்கு அருகில் சட்ட விதிகளுக்கு புறம்பாக SLS Steel and Furniture என்கிற பட்டறை இயங்குவது தொடர்பாக கடலூர் மாநகராட்சியில் மனு செய்ததாகவும், அன்னாரின் கோரிக்கை மனு மீது முறையாக செயல்படாமல் ஒருதலைபட்சமாக பட்டறை உரிமையாளர் திரு. ஆர். தியாகராஜனுக்கு உதவும் பட்சத்தில் அன்னாருக்கு பாதகமாக செயல்பட்ட கடலூர் மாநகராட்சி சுகாதாரப் பிரிவு திரு. செபஸ்டின், சுகாதார அலுவலர் மாநகர் நல அலுவலர் (பொறுப்பு) மற்றும் திருமதி பி. சித்ரா, இளநிலை உதவியாளர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், எம்.ஆர்.சி. நகர், சென்னை அவர்களுக்கு தனித்தனி புகார் மனுக்கள் அனுப்பியதாகவும் இந்த புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட விபரம் இதுநாள் வரை அறியப்படவில்லை எனவும், 01.12.2025 தேதிய விண்ணப்பம் மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)–ன் கீழ் விபரங்கள் வழங்கும்படி பொதுத் தகவல் வழங்கும் அலுவலக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை கோரியதாகவும் மேற்படி அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்கள் திருப்திகரமாகவும் முழுமையானதாகவும் இல்லை என்பதால், மேற்படி சட்டம் 19(1)ன்படி மேல்முறையீடு செய்ததாகவும், அதற்குண்டான பதில் ஏதும் வரப்பெறவில்லை எனவும் விரைவில் தக்க தீர்வு கிடைக்கும் என்கிற அடிப்படையில் தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்றத்தில் முறையீடு செய்துள்ளார்.

மனுதாரர் திரு. கோ. இராமானுஜம் என்பவர் 15/10, அக்கிள் நாயுடு தெரு, திருப்பாப்புலியூர், கடலூர்–607 002 என்ற விலாசத்தை சேர்ந்தவர் ஆவார். மனுதாரர் குடியிருப்பிற்கு அருகில் அதாவது கதவு எண் 17, அக்கிள் நாயுடு தெரு என்ற முகவரியில்

SLS Steel and Furniture என்ற பெயரில் திரு. ஆர். தியாகராஜன் என்பவர் பட்டறை வைத்து இரும்பு பீரோக்கள் செய்து உரிய வண்ணங்கள் அடித்து விற்பனை செய்யும் வணிக நிறுவனத்தை நடத்தி வருகையில் அப்பட்டறையில் தனக்கு சுகாதாரக் கேடு ஏற்படுகிறது என்றும், அப்பகுதி குடியிருப்பு பகுதியானதால் அப்பட்டறையை அந்த பகுதியில் நடத்திட தடை செய்ய வேண்டும் என தெரிவித்து அதன் அலுவலக நடவடிக்கையை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005–ன்படி 20.11.2024 அன்று கோரப்பட்டு அதற்கான தகவல்கள் அன்று அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி நிலையில் மேல்முறையீட்டாளரை திரு. கோ. இராமானுஜம் தனியரால் ஆட்சேபனை தெரிவித்த SLS Steel and Furniture இரும்பு பட்டறைக்கு பொது சுகாதாரச் சட்டத்தின்படி சுகாதார சீர்கேடுகளால் ஒலிமாசு இல்லாமல் பட்டறையை நடத்த 25.01.2025 அன்று அறிவிப்பு செய்யப்பட்டது. பட்டறை உரிமையாளர் திரு. ஆர். தியாகராஜன் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டபடி ஒளி, ஒலி மாசு ஏற்படாமல் பட்டறையை நடத்தி வருவதாகவும் பட்டறைக்கு அருகில் குடியிருப்பவர்களிடம் பாதிப்பு ஏதுமில்லை என்பதற்கு களப்பணி அறிக்கையை கேட்டு மனு பெறப்பட்டது. தொடர்ந்து மேல்முறையீட்டாளர் 02.01.2025 அன்று தன்னுடைய 20.11.2024 தேதிய தகவல் கோரும் மனுவிற்கு 30.11.2024 அன்று நடவடிக்கை எடுக்கப்பட்டது என தெரிவித்து இணைப்பு இணைக்கப்பட்டதாக தெரிவித்த நிலையில் மேற்படி அதில் இணைப்பு ஏதும் இல்லை என தெரிவித்து விண்ணப்பித்துள்ளார். எனவே, இதனைத் தொடர்ந்து 30.01.2025–ல் தமிழ்நாடு தகவல் ஆணைய வழக்கு எண் 31529/விசாரணை/பி/2014 நாள் 10.03.2016–ன்படி உரிய பதில் மேல்முறையீட்டாளருக்கு இவ்வலுவலக ந.க. எண் 8507/2023/எச்2 மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி தொழில் பட்டறை இயக்கம் குறித்து 03.01.2025 அன்று தொடர்புள்ள இடத்திற்கு D&O Trade License வழங்காத நிலையில் தொழிற்சாலை குடியிருப்பு பகுதியில் D&O Trade நடத்த தகுதியற்றது. எதிர்காலத்தில் தொழில் உரிமம் வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறேன் என குறிப்பிட்டு விண்ணப்பித்திருந்தார்.

தொடர்ந்து மேல்முறையீட்டாளர் மேற்படி SLS Steel and Furniture பட்டறை அகற்ற மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு மனு செய்ததற்கு, இவ்வலுவலக 23.01.2025 தேதிய கடிதம் ந.க. 8507/2024/எச்2 மூலம் மேற்படி தொழிற்பட்டறை நடத்தும் தியாகராஜன் குறிப்பிட்ட பட்டறை அருகில் வசிக்கும் குடியிருப்புவாசிகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு பட்டறையை மாற்றம் செய்து, குடியிருப்புவாசிகளிடமிருந்து களப்பணி குறித்த கையெழுத்து பெற்று விண்ணப்பித்துள்ளார் என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து 18.02.2025 மீளவும், தகவல் உரிமை பெறும் சட்டத்தின் கீழ் மேற்படி அதே பொருள் குறித்து சில தகவல் கோரியதற்கு இவ்வலுவலக 17.03.2025 தேதிய கடிதம் ந.க. எண் 1004/2025/எச்2 மூலம் உரிய தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி கடிதத்தை தொடர்ந்து மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சுற்றுச்சூழல் தொடர்பாக உள்ளதால் Environmental Engineer Tamil Nadu Pollution Control Board, கடலூர் அவர்களுக்கு உரிய வரைவு கடிதம் 20.03.2025 தேதியில் இவ்வலுவலக ந.க. எண் 280/2024/எச்2 மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு. கோ. இராமானுஜம் முறையீட்டில் குறிப்பிட்டுள்ள SLS Steel and Furniture தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களுக்கு புகார் மனு அளித்ததில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 08.05.2025 தேதிய ந.க. எண் 8750/2025/மா.ந.அ4 மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து கடிதம் பெறப்பட்டது. மேற்கண்ட நிலையில் மேற்குறிப்பிட்ட தொழிற்பட்டறை நடத்தி வரும் திரு. ஆர். தியாகராஜன் என்பவருக்கு 19.05.2025 தேதிய அறிவிப்பு நோட்டீஸ் சார்வு

செய்யப்பட்டது. தொழிற்பட்டறை உரிமையாளர் திரு. ஆர். தியாகராஜன் சார்பாக திரு எ. ராஜு மற்றும் திரு. சி. சிவானந்தம் என்ற வழக்கறிஞர்கள் தமது 26.05.2025 தேதிய கடிதம் மூலம் மேற்படி தொழிற்பட்டறை நடத்தி வரும் பிரஸ்தாபத்துரிய இடத்திற்கு அருகாமையில் உள்ள குடியிருப்புதாரர்களுக்கு தொழிற்பட்டறையின் ஒளி ஒலி மாசு ஏதும் ஏற்படவில்லை என்பதற்கான திரு. ஆர். தியாகராஜன் அருகாமையில் உள்ள குடியிருப்புவாசிகளிடம் களப்பணி ஒப்புதலை பெற்றுள்ளார் என தெரிவித்து தனது கட்சிக்காரர் சார்பாக வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டாளர் திரு. கோ. இராமானுஜம் பொதுமக்கள் குறைதீர் மனு மூலம் 09.12.2024 மற்றும் 20.04.2025 ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சியர் குறைதீர் பிரிவிற்கு விண்ணப்பித்தற்கு 26.05.2025 அன்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் அதன் நகல் முறையீட்டாளர் திரு. கோ. இராமானுஜம் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி நடவடிக்கைகளுக்கு நடப்பில் உள்ள நிலையில் மேல்முறையீட்டாளர், 03.06.2025 அன்று ஆணையர் கடலூர் மாநகராட்சிக்கு 24.02.2025 மற்றும் 18.03.2025–ல் மேல்முறையீடு செய்ததாகவும் அதற்கு பதில் அளிக்கவில்லை எனவும் தாம் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு மனு அளித்ததை தொடர்ந்த பட்டறை உரிமையாளருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது என அறிய முடிகிறது. எனவே திரு. ஆர். தியாகராஜன் வசமிருந்து வரப்பெற்ற கடிதத்தின் மீது உண்மைத்துவம் அறியப்பட்டதா அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது தெரியவில்லை எனவும் உள்ளாட்சி அமைப்புகள் மேற்படி ஒளி ஒலி மாசுபாடு குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய வரையில் உள்ளது எனவும், SLS Steel and Furniture பட்டறையை சுகாதாரம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்கீழ் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டி முடிவான பதிலை உடன் அனுப்பி வைக்க கோரியும் விண்ணப்பித்துள்ளார். தொடர்ந்து 27.06.2025 அன்று பொது சுகாதார சட்டத்தின்படி பட்டறை உரிமையாளர் திரு. ஆர். தியாகராஜன் தனியருக்கு அறிவிப்பு செய்யப்பட்டது. இது தொடர்பாக இவ்வலுவலக கடிதம் ந.க. 8507/2025/எச்2 நாள் 11.07.2025–ல் முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி நிலையில் பிரஸ்தாபத்திற்குரிய SLS Steel and Furniture நிறுவனத்தார் திரு. ஆர். தியாகராஜன் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் வழக்கு எண் 24904/2025 மூலம் ஆணையாளர், கடலூர் மாநகராட்சியை எதிர் வாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்க தடை ஆணை பெற்றுள்ளார். இந்நிகழ்வில் முறையீட்டாளர் 21.07.2025–ல் மேற்படி பட்டறை குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி தகவல் கோரியதற்கு இவ்வலுவலக 14.08.2025 அன்று ந.க. எண் 5401/2025/எச்2 மூலம் தகவல்கள் முறையீட்டாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் மேற்படி SLS Steel and Furniture பட்டறை தொடர்பாக தனக்கு கிடைக்கப்பெற்ற தகவல்கள் திருப்திகரமாக இல்லை என்றும் முழுமையானதாக இல்லை என்று நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு 01.12.2025 தேதியிட்ட மேல்முறையீட்டு விண்ணப்பம் 07.01.2026–ல் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் துறையின் ஒப்புதல் அட்டை பெறப்பட்ட நிலையில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 19(1)–ன்படி மேல்முறையீடு செய்ததால் தன்னுடைய புகாருக்கு எடுக்கப்பட்ட விபரங்கள் ஏதும் தனக்கு இதுநாள் வரை தெரியப்படுத்தவில்லை என்பதால் விரைவில் தீர்வு கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் முறைமன்றமன்ற நடுவர் அமைப்பிற்கு குறை தெரிவித்து தக்க உத்திரவுகள் வழங்கக் கோரியுள்ளார் என்பதாலும், இத்துடன் மேற்கண்ட புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்கள் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது.''

5. மனுதாரர் 28.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையின் போது தாக்கல் செய்த கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"கோ. இராமானுஜம் (வயது 75), த/பெ கோவிந்தராஜிலு, வசிப்பிடம் 15/10 அக்கிள் நாயுடு தெரு, திருப்பாதிரிபுலியூர், கடலூர்–2 ஆகிய நான் எனது 16.02.2026–ன் மனுவினை தொடர்ந்து நான் நடுவர் மன்றத்திற்கு 16.02.2026ல் மாநகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிய நகல் புகார் மனுக்களை தொடர்ந்து கீழ்க்கண்ட முறையீடுகளை தங்களின் மேலான பார்வைக்கும் நடவடிக்கைக்கும் சமர்ப்பிக்கிறேன்.

கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25, க. எண் 11, அக்கிள் நாயுடு தெரு பகுதியில் SLS Steel and Furniture & Manufactures என்கிற பட்டறையை திரு. M. தியாகராஜன் என்பவர் நடத்தி வருகிறார். மேற்கண்ட பட்டறைக்கு முறையான தொழில் உரிமம் ஏதும் இல்லை. D&O License பெறப்படவில்லை. மேலும் அரசால் குடியிருப்பு பகுதிகளில் அனுமதிக்க கூடாத பட்டறை ஆகும். இது ஒரு குற்றமாகும். காற்று மற்றும் ஒலி மாசு (Air & Noise Pollution) Painting and Fabrication ஏற்படுவதால் உடல்நலக் கோளாறுகள் (மூச்சு திணறல், சளி, ஜலதோஷம்) போன்று உபாதைகளால் அவதிபடுகிறோம். எனவே பட்டறையை நீக்கம் செய்ய கடலூர் மாநகராட்சி ஆணையருக்கு 24.09.2024ல் மனு செய்தேன். முதல் தடவையாக பட்டறையை ஆய்வு செய்த கடலூர் மாநகராட்சி சுகாதார அலுவலர் திரு. செபஸ்டின் உரிய உரிமம் ஏதும் இல்லை என்பதால் ஆரம்ப கட்டத்திலேயே பட்டறையை நிறுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும். இதை தவிர்த்து மாறாக பட்டறை உரிமையாளரின் கவனிப்பின் பேரில் அவர்களுக்கு உதவும் வகையில் பட்டறை உரிமையாளருக்கு Notice (அறிக்கை கோரல்) அனுப்பி அதற்கு பட்டறை உரிமையாளர் பட்டறையை தகுந்த மாற்றம் செய்ததாகவும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் இருந்து ஆட்சேபனை இல்லா கடிதம் வரப் பெற்றதாகவும், நாடகம் நடைபெற்றுள்ளது. ஆட்சேபனை இல்லா கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கையொப்பங்களில் சில போலியானதாகும். அதில் வரிசை எண் 7–ல் பட்டறை உரிமையாளர் கையொப்பமிட்டுள்ளார். ஆட்சேபனை இல்லை என தெரிவித்த கடிதத்தின் மீது உண்மை தன்மை சரிபார்க்கவில்லை. சரிபார்க்க தவறிவிட்டார். 7.11.24 & 25.1.25 தேதிகளில் அனுப்பப்பட்ட Notice மீது குற்ற நடவடிக்கை எடுக்க தவறியுள்ளார்கள். மேலும் இது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்களிடம் கொடுத்த மனுக்களின் மீது நேர்மையான ஆணையர் (திருமதி அனு, IAS) அவர்களின் நியாயமான நடவடிக்கையால் எனக்கு பரிகாரம் கிடைக்கப் பெற்றது. இதன்பின்னர் பட்டறை உரிமையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் கடலூர் மாநகராட்சி ஆணையாளரின் உத்தரவிற்கு தடையாணை பெற்றுள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் திரு. செபஸ்டியன் (சுகாதார அலுவலர் மற்றும் பொறுப்பு நகர்நல அலுவலர் மற்றும் H2 பிரிவு உதவியாளர்) இவர்கள் இருவர்கள் முறைகேடுகளுக்கு காரணமானவர்கள் என தெரிவித்து கொள்கிறேன்.

எனது 25.9.24 தேதியிட்ட அசல் மனுவினை மறைத்துள்ளார்கள். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி சில தகவல்கள் பெற்றேன். அதற்கு சரியான முழுமையான பதில்களை தருவதில்லை. எந்த தகவல் அறியும் உரிமை சட்டம், 2005 மேல்முறையீட்டு மனுவுக்கும் பதில் கிடைக்கப் பெறவில்லை.

எனது 25.9.2024 தேதியிட்ட மனுவின் பேரில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் த.நா.மா.க. கடலூர் அவர்களின் கடித எண் (2846/TNPCB/CUD/Complaint) 2024 நாள் 1.10.24 மற்றும் 9.12.24 தேதியிட்ட கடிதங்களின்படி மாநகராட்சி ஆணையர் கடலூர்

அவர்களுக்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்த கடிதங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. காலதாமதத்தை மறைக்கும் முறையில் 9.12.24 அன்று மக்கள் குறை தீர்ப்பு நாளில் நான் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் ந.க. 280/H2/2024 நாள் 20.03.2024ல் திரும்ப சுற்றுச்சூழல் பொறியாளர் கடலூர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார். அதில் நிர்வாக இயக்குநர் மாநகராட்சி சென்னை அவர்களுக்கு ந.க. 280/24/H2/26.5.25ல் குறிப்பிட்டதுபோல் மாநகராட்சியில் போதிய தொழில் நுட்ப வசதிகள் ஏதும் இல்லை என்பதை தெரியப்படுத்தவில்லை.

எனது 24.11.25 தேதியிட்ட தகவல் வழங்கும் சட்டம் 2005ன்படி கோரிய மனுவின் பதில் கடிதத்தில் இணைக்கப்பட்டதாக கூறப்படும் (இணைப்புகள்) கடிதங்கள் வரப்பெறவில்லை. எனவே அதனை அனுப்பி வைக்க கோரி மனு செய்தேன். இது தொடர்பாக எந்த அலுவலருக்கும் மேல்முறையீடு செய்யாத பட்சத்தில் பொது தகவல் அலுவலர் (ம) மாநகராட்சி அலுவலகம் ந.க. எண் 8507/2023/H2 நாள் 30.1.25 தேதியிட்ட கடிதத்தில் தகவல் ஆணைய வழக்கு எண் 31529/விசாரணை/P/2014 நாள் 10.3.2016 மேற்கோள் காட்டி தகவல் வழங்கும் சட்டத்தில் வாய்ப்புகள் இல்லை என தெரிவிக்கப்பட்டது. நான் கோரிய தகவல்கள் அனைத்தும் கடலூர் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ளவை. தனக்கு வேண்டிய தகவல்கள் எங்கு இருக்கிறதோ அங்கு நேரடியாக பெற்று கொள்ள தகவல் வழங்கும் சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தவறான தகவல் மூலம் மாநகர நகர் நல அலுவலரை misguide செய்துள்ளார்கள். பின்னர் 18.3.2025 மாநகர் ஆணையரை நேரில் சந்தித்து முறையிட்ட பின்னர் மற்ற கடிதங்களுக்கு முழுதும் திருப்திகரமில்லாமல் ஏதோ தகவல்கள் வழங்கப்பட்டது.

பட்டறை உரிமையாளரின் 14.12.24 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பத்து பேரின் சாட்சியம் பெற்று பதில் கடிதம் வரப் பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சில கையொப்பங்கள் போலியானவை. இதில் 7வது கையொப்பம் பட்டறை உரிமையாளர் திரு. M. தியாகராஜன் என்பதால் ஆய்வின் போது கடிதத்தில் உள்ள கையொப்பத்தின் உண்மை தன்மை சரிபார்க்கவில்லை. மேலும் ஆரம்பத்தில் தகுந்த உரிமம் பெறப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டு பட்டறையை நிறுத்தம் செய்ய ஆணை பிறப்பித்திருக்கலாம். தேவையில்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் மற்றும் நிர்வாக இயக்குநர் மாநகராட்சி சென்னை அவர்களுக்கு தவறான தகவல்களை அனுப்பியுள்ளார். இதன் மூலம் உயர் அதிகாரிகளை Mislead and Misguide செய்துள்ளார்கள்.

எனக்கு தகவல்களும் கிடைக்கப் பெறாததால் மாநகர ஆணையரை 25.6.25 அன்று நேரில் முறையிட சென்ற பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு எனக்கு வழங்க வேண்டிய நகல் கடிதங்களை உடன் வழங்கும்படி வாய் மொழியாக 25.6.25 அன்று உத்தரவிட்டனர். ஆனால் உடன் மற்ற கடிதங்களை வழங்காமல் ந.க. எண் 8507/2025/H2/ நாள் 11.7.25 தேதியிட்ட கடிதத்தின்படி எனக்கு 19.7.25ல் கிடைக்கப்பெற்றேன். குறித்த காலத்திற்குள் எனக்கு தகவல்கள் கிடைக்கப் பெறாததால் என்னால் Caveat Petition போட முடியவில்லை. பட்டறை உரிமையாளருக்கு உதவும் வகையில் நடந்து கொண்டு, பட்டறை உரிமையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தடையாணை பெற உதவியுள்ளார்கள் எனக் கருத வேண்டி உள்ளது.

எனது 18.07.2025 தேதியிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 2005 மனுவின் பேரில் தகவல் வழங்கும் அலுவலர், கடலூர் மாநகராட்சி, கடலூர் அவர்களிடம் இருந்து குறிப்பிட்ட காலகெடுவிற்குள் பதில் கிடைக்கப் பெறாததால் 28.08.2025 தேதியில்

மேல்முறையீட்டு அலுவலருக்கு மேல்முறையீடு செய்தேன். அதற்கு பொது தகவல் அலுவலரிடம் இருந்து 14.8.25 தேதியிட்ட பதில் கடிதம் எனக்கு 16.09.2025–ல் அஞ்சல் துறையினரால் கிடைக்கப் பெற்றது. எனக்கு தகவல்கள் ஏதும் உடன் கிடைக்கப் பெறாததால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள முடியாமல் தவித்தேன். எனது 18.7.25 தேதியிட்ட தகவல் அறியும் சட்டத்தில் கோரிய கடிதத்திற்கு 10.9.25ல் தகவல் கிடைக்கப் பெற்றது. இதற்கு தகவல் வழங்கும் அலுவலரா (அ) சம்பந்ததப்பட்ட "H2" உதவியாளரா என தீர்வு செய்ய வேண்டும்.

முறையீட்டில் கண்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது எனவும் சரியானது என உறுதி கூறுகிறேன். எனது மனுவை நடுவர் மன்றம் பரிசீலித்து தக்க நீதி வழங்கும்படி பிரார்த்திக்கின்றேன்."

6. மனுதாரர் 28.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"எனது வீட்டிற்கு பக்கத்தில், சட்ட விதிகளுக்கு புறம்பாக SLS Steel and Furniture என்கிற பட்டறை இயங்குவது தொடர்பாக கடலூர் மாநகராட்சியில் புகார் மனு அளித்தேன். இத்தொழிற்சாலை, நகராட்சி நகரமைப்பின் அனுமதி பெறமாலும், D & O Licence பெறாமலும் இயங்கி வருகிறது. ஆரம்ப நிலையிலேயே பட்டறை உரிமையாளருக்கு, பட்டறையை நிறுத்த உத்திரவிட்டிருக்கலாம். ஆனால் எனது மனுவின் மீது முறையாக செயல்படாமல், ஒருதலை பட்சமாக பட்டறை உரிமையாளருக்கு சாதகமாக செயல்பட்ட கடலூர் மாநகராட்சி சுகாதார பிரிவு சுகாதார அலுவலர், நகர்நல அலுவலர் (பொறுப்பு) மற்றும் திருமதி.சித்ரா, உதவியாளர் (H2) ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாகத்துறை, எம்.ஆர்.சி. நகர், சென்னை அவர்களுக்கு தனித்தனியாக புகார் மனுக்கள் 04.08.2025, 25.08.2025 மற்றும் 15.10.2025 நாளிட்ட மனுக்களை பதிவுத் தபால்கள் மூலம் அனுப்பி வைத்தேன். பல நினைவூட்டு கடிதங்கள் அனுப்பியும், சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மீது இதுநாள் வரை கடலூர் மாநகராட்சியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேற்கண்ட பட்டறை அனுமதியில்லாமல் குடியிருப்பு பகுதியில் இயங்குவதாலும், அந்த பட்டறையிருந்து அதிக சத்தமும், சுற்றுச்சூழல் பாதிக்கும் வகையில் வர்ணத்தை Spray செய்வதால் எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கும் நுரையீரல் சார்ந்த நோய் ஏற்பட்டு அவதிப்பட்டு வருகிறோம்.

கடலூர் நகராட்சியின் சுகாதார அலுவலர், நகர் நல அலுவலர் ஆகியோர் நேர்மையாக செயல்படாமலும், ஆணையருக்கு தவறான தகவல் அளித்தும் மற்றும் நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களுக்கு முறையாக குறித்த காலத்தில் அளிக்கப்படாததின் காரணமாக மேற்கண்ட பட்டறையின் உரிமையாளர் தற்பொழுது மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.எண்.24904 / 2025 தாக்கல் செய்து அவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

எனவே, சட்ட விதிகளுக்கு புறம்பாகவும், அனுமதியில்லாமலும் இயங்கும் SLS Steel and Furniture பட்டறை மீது உரிய நடவடிக்கையும், எனது புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காத கடலூர் மாநகராட்சி சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் பட்டறையின் உரிமையாளர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில்

தடையாணையை நீக்க உரிய சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு கடலூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.''

7. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் கடலூர் மாநகராட்சியின் நிர்வாக அலுவலர் 28.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் திரு கோ. இராமானுஜம் என்பவர் 15/10 அக்கிள் நாயுடு தெரு திருப்பாப்புலியூர் கடலூர்–2 என்ற விலாசத்தை சேர்ந்தவர் ஆவார். மனுதாரர் குடியிருப்பிற்கு அருகில் கதவு எண் 17 அக்கிள் நாயுடு தெரு என்ற முகவரியில் SLS Steel and Furniture என்ற பெயரில் திரு ஆர். தியாகராஜன் என்பவர் பட்டறை வைத்து இரும்பு பீரோக்கள் செய்து உரிய வண்ணங்கள் அடித்து விற்பனை செய்யும் வணிக நிறுவனத்தை நடத்தி வருகிறார். மனுதாரரின் புகார் அடிப்படையில் மேற்கண்ட இரும்பு பட்டறைக்கு பொது சுகாதாரச் சட்டத்தின்படி சுகாதார சீர்கேடுகளால் ஒலிமாசு இல்லாமல் பட்டறையை நடத்த 25.01.2025 அன்று அறிவிப்பு செய்யப்பட்டது. அதன்படி பட்டறைக்கு அருகில் குடியிருப்பவர்களிடம் பாதிப்பு ஏதுமில்லை என்பதற்கு களப்பணி அறிக்கை பெறப்பட்டது. மீண்டும் பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் தொழிற்பட்டறை உரிமையாளருக்கு 19.05.2025 நாளிட்ட நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டது. தொழிற்பட்டறை உரிமையாளர் சார்பாக வழக்கறிஞர்கள் தமது 26.05.2025 தேதிய கடிதம் மூலம் மேற்படி தொழிற்பட்டறை நடத்தி வரும் பிரஸ்தாபத்துக்குரிய இடத்திற்கு அருகாமையில் உள்ள குடியிருப்புதாரர்களுக்கு தொழில்பட்டறையின் ஒளி, ஒலி மாசு ஏதும் எற்படவில்லை என்பதற்கான அங்கு உள்ள குடியிருப்புவாசிகளிடம் களப்பணி ஒப்புதலை பெற்று அனுப்பியுள்ளார்.

மேற்படி நிலையில் SLS Steel and Furniture நிறுவனத்தின் உரிமையாளர் திரு ஆர். தியாகராஜன் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். 24904/2025ஐ தொடர்ந்து கடலூர் மாநகராட்சி நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்க தடை ஆணை பெற்றுள்ளதை நீக்க கடலூர் மாநகராட்சி சார்பாக 15.09.2025ல் நாளிட்ட Counter Affidavit தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

8. இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் SLS Steel and Furniture நிறுவனத்தின் உரிமையாளர் திரு R. தியாகராஜன் என்பவர் 28.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''கடலூர் திருப்பாதிரிபுலியூர் அக்கிள் நாயுடு தெருவில், கதவு எண்.11ல் SLS Steel and Furniture என்ற நிறுவனத்தை 2023 முதல் கடலூர் மாநகராட்சியிடம் முறையான தொழில் உரிமம் பெற்று நடத்தி வருகிறேன். இறுதியாக கடலூர் மாநகராட்சி 15.03.2026 நாளிட்ட உரிமம் எண்.093/2026/01/025/00009 வழங்கி உள்ளது. எனது நிறுவனத்தின் மீது மனுதாரர் மட்டும் புகார் தெரிவித்துள்ளார். அப்பகுதியில் உள்ள மக்கள் புகார் ஏதும் தெரிவிக்கவில்லை. மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில் கடலூர் மாநகராட்சி சார்பாக தாக்கீதுகள் வழங்கப்பட்டன. எனவே, தாக்கீதுகளை எதிர்த்து நான் பெருநகர மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.24904 / 2025ஐ தொடர்ந்து தடையாணையை பெற்றுள்ளேன் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

9. முறையீட்டு மனுதாரரின் மனு, கடிதம், வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான கடலூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, நிர்வாக அலுவலரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கடலூர், திருப்பாதிரிபுலியூர், அக்கிள் நாயுடு தெருவில், கதவு எண்.11ல் SLS Steel and Furniture என்ற பட்டறை சட்டத்திற்கு எதிராகவும், நகராட்சி நகரமைப்பின் அனுமதி பெறமாலும், D & O Licence பெறாமலும் இயங்குவது தொடர்பாக கடலூர் மாநகராட்சிக்கு மனுதாரரால் அளிக்கப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில், ஆரம்ப நிலையிலேயே பட்டறை உரிமையாளருக்கு, பட்டறையை நிறுத்த உத்திரவு விட்டிருக்கலாம் என்பதும், மனுதாரரின் மனுவின் மீது முறையாக செயல்படாமல், ஒருதலை பட்சமாக பட்டறை உரிமையாளருக்கு சாதகமாக செயல்பட்ட கடலூர் மாநகராட்சி சுகாதார பிரிவு சுகாதார அலுவலர், நகர்நல அலுவலர் (பொறுப்பு) மற்றும் H2 பிரிவு உதவியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு புகார்கள் அனுப்பப்பட்டும், சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மீது இதுநாள் வரை கடலூர் மாநகராட்சியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், மேற்கண்ட பட்டறை அனுமதியில்லாமல் குடியிருப்பு பகுதியில் இயங்குவதாலும், அந்த பட்டறையிருந்து அதிக சத்தமும், சுற்றுச்சூழல் பாதிக்கும் வகையில் வர்ணத்தை Spray செய்வதால் மனுதாரருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கும் நுரையீரல் சார்ந்த நோய் ஏற்பட்டு அவதிப்படுகிறார்கள் என்பதும், கடலூர் மாநகராட்சியின் சுகாதார அலுவலர், நகர் நல அலுவலர் ஆகியோர் நேர்மையாக செயல்படாமலும், ஆணையருக்கு தவறான தகவல் அளித்தும் மற்றும் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய தகவல்களுக்கு முறையாக குறித்த காலத்தில் தகவல் அளிக்கப்படாததின் காரணமாக மேற்கண்ட பட்டறையின் உரிமையாளர் தற்பொழுது மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.எண்.24904 / 2025 தாக்கல் செய்து அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதும், சட்ட விதிகளுக்கு மாறாகவும், அனுமதியில்லாமலும் இயங்கும் SLS Steel and Furniture பட்டறை மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், தனது புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காத கடலூர் மாநகராட்சி சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும், மேற்கண்ட பட்டறையின் உரிமையாளர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் பெற்ற தடையாணையை நீக்க உரிய சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு கடலூர் மாநகராட்சி ஆணையாளருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு, கடிதம் மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள அன்னாரது குடியிருப்பிற்கு அருகில் கதவு எண் 11 அக்கிள் நாயுடு தெரு என்ற முகவரியில் SLS Steel and Furniture என்ற பெயரில் திரு ஆர். தியாகராஜன் என்பவர் பட்டறை வைத்து இரும்பு பீரோக்கள் செய்து உரிய வண்ணங்கள் அடித்து விற்பனை செய்யும் வணிக நிறுவனத்தை நடத்தி வருகிறார் என்பதும், மனுதாரரின் புகார் அடிப்படையில் மேற்கண்ட இரும்பு பட்டறைக்கு பொது சுகாதாரச் சட்டத்தின்படி சுகாதார சீர்கேடுகளால் ஒலிமாசு இல்லாமல் பட்டறையை நடத்த அறிவிப்பு செய்யப்பட்டதன்படி பட்டறைக்கு அருகில் குடியிருப்பவர்களிடம் பாதிப்பு ஏதுமில்லை என்பதற்கு களப்பணி அறிக்கை பெறப்பட்டது என்பதும், மீண்டும் மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் தொழிற்பட்டறை உரிமையாளருக்கு நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டதற்கு, தொழிற்பட்டறை உரிமையாளர் சார்பாக வழக்கறிஞர்கள் மேற்படி தொழிற்பட்டறை நடத்தி வரும் இடத்திற்கு அருகாமையில் உள்ள குடியிருப்புதாரர்களுக்கு தொழில்பட்டறையின் ஒளி, ஒலி மாசு ஏதும் எற்படவில்லை

என்பதற்கான அங்கு உள்ள குடியிருப்புவாசிகளிடம் களப்பணி ஒப்புதலை பெற்று தமது கடிதம் அனுப்பியுள்ளனர் என்பதும், மேற்படி நிலையில் SLS Steel and Furniture நிறுவனத்தின் உரிமையாளர் திரு ஆர். தியாகராஜன் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் 24904/2025–ல் வழக்கு தொடர்ந்து, கடலூர் மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்க தடை ஆணை பெறப்பட்டுள்ளது என்பதும், அத்தடையாணையை நீக்க கடலூர் மாநகராட்சி சார்பாக Counter Affidavit மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் முதலாம் எதிர்மனுதாரரான கடலூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் நிர்வாக அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

கடலூர் திருப்பாதிரிபுலியூர் அக்கிள் நாயுடு தெருவில், கதவு எண்.11ல் SLS Steel and Furniture என்ற நிறுவனத்தை 2023 முதல் கடலூர் மாநகராட்சியிடம் முறையான தொழில் உரிமம் பெற்று நடத்தி வருகிறார் என்பதும், இறுதியாக கடலூர் மாநகராட்சி 15.03.2026 நாளிட்ட உரிமம் எண்.093/2026/01/025/00009 வழங்கி உள்ளது என்பதும், தனது நிறுவனத்தின் மீது மனுதாரர் மட்டும் புகார் தெரிவித்துள்ள நிலையில், அப்பகுதியில் உள்ள மக்கள் புகார் ஏதும் தெரிவிக்கவில்லை என்பதும், மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில் கடலூர் மாநகராட்சி சார்பாக வழங்கப்பட்ட தாக்கீதுகளை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் 24904/2025 தொடர்ந்த வழக்கில் தடையாணையை பெற்றுள்ளார் என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், கடலூர் மாநகராட்சி, திருப்பாதிரிபுலியூர், அக்கிள் நாயுடு தெரு, கதவு எண் 11–ல் உள்ள SLS Steel and Furniture என்ற பட்டறை சட்டத்திற்கு விரோதமாக இயங்கி வருவதாக மனுதாரர் அளித்துள்ள புகார் தொடர்பாக, பொது சுகாதாரச் சட்டத்தின்படி சுகாதார சீர்கேடுகளால் ஒலி மாசு இல்லாமல் பட்டறையை நடத்த அறிவிப்பு செய்யப்பட்டதன்படி, அப்பட்டறைக்கு அருகில் குடியிருப்பவர்களிடம் பாதிப்பு ஏதுமில்லை என்பதற்கு களப்பணி அறிக்கை பெறப்பட்டது என்றும், மீண்டும் மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் தொழிற்பட்டறை உரிமையாளருக்கு நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டதற்கு, தொழிற்பட்டறை உரிமையாளர் சார்பாக வழக்கறிஞர்கள் மேற்படி தொழிற்பட்டறை நடத்தி வரும் இடத்திற்கு அருகாமையில் உள்ள குடியிருப்புதாரர்களுக்கு தொழில்பட்டறையின் ஒளி, ஒலி, மாசு ஏதும் எற்படவில்லை என்பதற்கு அங்கு உள்ள குடியிருப்புவாசிகளிடம் களப்பணி ஒப்புதலை பெற்று கடிதம் அனுப்பியுள்ளனர் என்றும், கடலூர் மாநகராட்சி சார்பாக வழங்கப்பட்ட தாக்கீதுகளை எதிர்த்து SLS Steel and Furniture நிறுவனத்தின் உரிமையாளர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் 24904/2025–ல் வழக்கு தொடர்ந்து, கடலூர் மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்க பெறப்பட்ட தடை ஆணையை நீக்க கடலூர் மாநகராட்சி சார்பாக Counter Affidavit மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கடலூர் மாநகராட்சி நிர்வாக அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்திலும், மனுதாரர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரும் மேற்கண்ட வழக்கு குறித்து தங்களுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

மேற்காண் சூழ்நிலையில், நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளப்பட்டது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,

Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P. No. 24904 of 2025 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. கோ. இராமானுஜம்.
கதவு எண் 15/10, அக்கிள் நாயுடு தெரு,
திருப்பாதிரிபுலியூர், கடலூர்–607 002.

(2) ஆணையர், கடலூர் மாநகராட்சி,
கடலூர்.

(3) திரு. R.தியாகராஜன், உரிமையாளர்,
SLS Steel and Furniture,
கதவு எண்.11, அக்கிள் நாயுடு தெரு
திருப்பாதிரிபுலியூர், கடலூர்–607 002.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

நகல் :

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

13/10/26

செயலாளர்.